ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி அ. பிரஜோத்பத்தி௵ வைகாசி௴ பகுதி ரு.
Vol 8. May & June 1931. No. 5.

பன்மணித்திரள்.

உதாசீனன்.

உதாசீனன்—உபேக்ஷையுடையவன். உலகத்தில் பல்வேறு அதிகாரிகளுண்டு. இவர்கள் தத்தம் மனநிலைக்கேற்றவாறு சில பொருள்களில் உபேக்ஷையுடையவராயும், சிலவற்றில் அபேக்ஷையுடையவராயுமிருக்கின்றார்கள். இவர்களுள் ஸம்ஸாரியானவன் தேகமே ஆத்மாவென்ற கருத்துடையவனாதலால் இவன் தேகத்தைப் போஷித்து வளர்க்கின்ற அன்னபானாதிகளில் அபேக்ஷையும் ஏனையவற்றில் உபேக்ஷையுமுடையவனாயிருப்பன். முமுக்ஷு வென்பவன் மோக்ஷத்தில் விருப்புடையவனாதலால், இவன் பரமபதத்தை யடைவதில் அபேக்ஷையும் ஏனையவற்றில் உபேக்ஷையுமுடையவனாயிருப்பன். இவ்வாறே உபேக்ஷை அபேக்ஷைகள் அதிகாரானுகுணமாக பலவேறுபட்டிருக்குமென்றறியத்தக்கது.

இந்த விருப்பு வெறுப்புகள் கர்மவசப்பட்ட ஆத்மாக்களிடத்திலுள்ளன. ஸர்வேசுவரன் கர்மசம்பந்தமற்றவனாதலால் விருப்பு வெறுப்பற்றவனாயிருப்பன். இதுபற்றியே, "வேண்டுதல் வேண்டாமையிலான்" என்றுரைத்ததுங் காண்க. இங்ஙனமிருக்கினும் ஒரு விஷயத்தில் மாத்திரம் உதாசீனனாயிருக்கிறானென்று ஒப்புக்கொள்ள வேண்டும். இவ்வாறு ஒப்புக்கொள்ளாவிட்டால் புண்ணியபாபரூப கர்மங்களை இவனே செய்விக்கிறானென்ற பழி ஸர்வேசுவரனுக்குண்டாகும். இப்பழி இவனுக்குச் சிறிதேனு

மில்லை யென்பது தெளிவு. இதற்காகவே சேதனர் முன்னர்ப் புண்ணியபாபரூப கர்மங்களைச்செய்யும்போது ஸர்வேசுவரனுக்கு உபேக்ஷகத்வம், அநுமந்த்ருத்வம், ப்ரயோஜயித்ருத்வம் என்ற மூன்று குணங்களுண்டு என்று ஒப்புக்கொள்ளவேண்டும். இவற்றுள் உபேக்ஷகத்வமாவது—எல்லாம் வல்லவனும் ஸத்யஸங்கல்பனும் மிக்க அருளுடையவனுமிருக்கிற ஸர்வேசுவரன் ஜகத்ஸ்ருஷ்டியாதிரூபலீலையில் முயன்று, 'இக்கர்மங்கள் பொருத்தமுடையன ; இவை பொருத்தமற்றன' என்று ஏற்படுத்தி, அதற்கேற்பச் சேதனர்கள் செய்த கர்மத்துக்கிடாகத் தேகேந்திரியங்களையும், ப்ர வர்த் தி சக்தியையும் எல்லாச் சேதனர்கட்கும் கொடுத்ததோடு, பகுத்தறிய சாஸ்திரத்தையும் ஏற்படுத்தி அந்தராத்மாவாயிருக்க, சேதனர்கள் அவன் கொடுத்த தேகேந்திரியங்களைக் கொண்டு ஸ்வேச்சையாக முதலில் புண்ணியபாபரூப கர்மங்களில் முயலும்போது உதாசீனனாயிருக்கை. அநுமந்த்ருத்வமாவது—நன்மை தீமைகளில் முயலும்சேதனர்களை அவற்றில் ப்ரவர்த்திக்கும்படி அநுமதிசெய்துகொண்டிருக்கை. ப்ரயோஜயித்ருத்வமாவது—மிகவும் அநுகூலமான விஷயத்தில் முயன்றவர்களை மேன்மேலும் அவர்களது ப்ரவ்ருத்தி இடையீடின்றி நடைபெற ஹிதத்தைச்செய்தும், மிகவும் ப்ராதிகூலமான விஷயத்தில் முயன்றவர்களைக் கொடிய நரகங்களிற் கிடந்துழலும்படி செய்துகொண்டிருப்பதாம். இதனைக் கண்ணன் கீதையில்,

𑌨 𑌚 𑌮𑌾𑌂 𑌤𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯 ।
𑌉𑌦𑌾𑌸𑍀𑌨𑌵𑌦𑌾𑌸𑍀𑌨𑌮𑌸𑌕𑍍𑌤𑌂 𑌤𑍇𑌷𑍁 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 ॥

நசமாந்தாநி கர்மாணி நிபத்நந்தி தநஞ்சய
உதாஸீந வதாஸீந மஸக்தம்தேஷு கர்மஸு

என்று அருளிச்செய்தனன். இதற்குப் பாஷ்யகாரருளிய உரை வருமாறு—"அர்ச்சுன! வேறுபாட்டினையுடைய ஸ்ருஷ்டி முதலிய தொழில்களைச் செய்வதால், எனக்கு அருளின்மை முதலிய குற்றங்கள் உண்டாகமாட்டா. ஏனெனின், ஆத்மாக்கள் தேவமனுஷ்யாதி பேதங்களைப்பெறுதற்கு அவ்வவ்வாத்மாக்கள் செய்த பூர்வகர்மங்களே காரணமாகும். நான் அந்த வைஷம்ய விஷத்தில்

உதாசீநனாகவிருக்கிறேனுதலாலென்க. இவ்வாறே ஸூத்ரகாரரும், "வைஷம்யநைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத்" "வைஷம்யநைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத்" என்றும், "நகர்மாவிபாகாதிதி சேந்நாநாதித்வாத்" "நகர்மா விபாகாதிதி சேந்நாநாதித்வாத்" என்றும் உரைத்துச் சென்றார்" என்பதாம்.

ஆத்ம குணங்கள்.

ஆத்மாவுக்கு மேன்மையை யுண்டுபண்ணித்தருகின்ற குணக்கள் பல வுள்ளன. அவையாவன.— பெரியோர்களை இகழாதொழிகை, புகழ் கருதி அறஞ்செய்யாமை, மனோவாக்குக் காயங்களால் பிறருக்குத் துன்பஞ்செய்யாமை, தனக்கவமானஞ்செய்தவரிடத்தில் ஓரபகாரங்கருதாமை, பிறர் விஷயத்தில் முக்கரணங்களும் ஒழுங்காயிருக்கை, ஆத்மஞானத்தை உபதேசித்த ஆசார்ய விஷயத்தில் அன்புற்றுப் பணிவிடை செய்கை, ஆத்ம ஞானத்திற்கு இன்றியமையாததென்று சாஸ்திரங்களில் விதித்தபடி மனோவாக்குக் காயங்களின் தூய்மை, வேதாந்தத்திற் சொல்லப்பட்ட அர்த்த விஷயத்திற் கலக்கமற்றிருக்கை, ஆத்ம ஸ்வரூபத்தையொழிந்த மற்ற விஷயங்களில் மனஞ் செல்லாமை, ஆத்மாவையொழிந்த மற்ற விஷயங்களில் தோஷ புத்தியால் வெறுப்புற்றிருக்கை, தேஹமே ஆத்மாவென்கிற அபிமானமில்லாமை, தனதல்லா எல்லாப்பொருள்களிலும் தனதென்கிற அபிமானமில்லாமை, சரீரம் உள்ளவரை பிறப்பு, இறப்பு, கிழத்தனம், நோய், துயரம் என்பவை ஒழிக்கப்போகா என்ற நினைவு, ஆத்மாவையொழிந்தவைகளிற் பற்றின்மை, மனைவி மக்கள் வீடு முதலியவைகளில் பகவதாராதநாதி கிரியோபயோகமென்ற கருத்தன்றித் பிறிதொரு பிரயோஜனத்தை விரும்பாதிருக்கை, இஷ்ட சித்தி யுண்டானபோது களிப்பும், அநிஷ்டமுண்டானபோது வெறுப்புமில்லாதிருக்கை, ஸர்வேசுவரனிடத்தில் சலியாத பக்தியுடைமை, ஜனமில்லாத தேசத்தில் வாசம் பண்ணுகை, ஸம்ஸாரிகளுடைய கூட்டத்தில் விருப்பமற்றிருக்கை, ஆத்ம ஞானத்தில் நிஷ்டை, தத்வ ஞானத்தையடைதற்குச் சிந்திக்கை என்பனவாம். இவையே

தேகத்தோடுகூடிய ஆத்மா தத்வஞானத்தைப் பெறுதற்குச் சாதனங்களாம். இது விஷயம் கண்ணன் அருளிய கீதையில் தெளிவாகக் காணலாம். அது வருமாறு:—

𑌅𑌮𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑌮𑌦𑌮𑍍𑌭𑌿𑌤𑍍𑌵𑌮𑍍 𑌅𑌹𑌿𑌂𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌿 𑌰𑌾𑌰𑍍𑌜𑌵𑌮𑍍 ।
𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑍋𑌪𑌾𑌸𑌨𑌂 𑌶𑍌𑌚𑌂 𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌯𑌮𑌾𑌤𑍍𑌮 𑌵𑌿𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 ॥

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌥𑍇𑌷𑍁 𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌮𑌨𑌹𑌂𑌕𑌾𑌰 𑌏𑌵𑌚 ।
𑌜𑌨𑍍𑌮 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌜𑌰𑌾𑌵𑍍𑌯𑌾𑌧𑌿 𑌦𑍁𑌃𑌖𑌦𑍋𑌷𑌾𑌨𑍁𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ॥

𑌅𑌸𑌕𑍍𑌤𑌿𑌰𑌨𑌭𑌿𑌷𑍍𑌵𑌂𑌗𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌦𑌾𑌰𑌗𑍃𑌹𑌾𑌦𑌿𑌷𑍁 ।
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂𑌚 𑌸𑌮𑌚𑌿𑌤𑍍𑌤𑌤𑍍𑌵𑌮𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑌿𑌷𑍍𑌟𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌷𑍁 ॥

𑌮𑌯𑌿𑌚𑌾𑌨𑌨𑍍𑌯𑌯𑍋𑌗𑍇𑌨 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌿𑌣𑍀 ।
𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌦𑍇𑌶𑌸𑍇𑌵𑌿𑌤𑍍𑌵 𑌮𑌰𑌤𑌿𑌰𑍍𑌜𑌨𑌸𑌂𑌸𑌦𑌿 ॥

𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ।
𑌏𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌿𑌤𑌿𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌂𑌯𑌦𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌥𑌾 ॥

அமாநித்வ மதம்பித்வம் அஹிம்ஸா க்ஷாந்திரார்ஜவம்
ஆசாரயோயாஸநம் சௌசம் ஸ்தைர்யமாத்ம விநிக்ரஹ:

இந்திரியார்த்தேஷு வைராக்யம் அநஹம்காரஏவச
ஜர்மம்ருத்யு ஜராவ்யாதி துக்கதோஷாநு தர்சநம்

அசக்திரநபிஷ்வங்க: புத்ரதார க்ருஹாதிஷு
நித்யஞ்ச ஸமசித்தத்வம் இஷ்டாநிஷ்டோபபத்திஷு

மயிசாநந்ய யோகேந பக்திரவ்யபிசாரிணீ
விவிக்ததேசஸேவித்வ மரதிர்ஜநஸம்ஸதி

அத்யாத்மஜ்ஞாந நித்யத்வம் தத்வஜ்ஞாநார்த்த தர்சநம்
ஏதஜ்ஞாந மிதிப்ரோக்தம் அஜ்ஞாநம் யததோந்யதா.